திருஅவையின் பாரம்பரியம் எப்போதும் மரித்தவர்களுக்காக இறைவேண்டல் செய்வதை குறிப்பாக அவர்களுக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுப்பதை வலியுறுத்துகிறது.

*- திருத்தந்தை பிரான்சிஸ்*




**இன்றைய இறைவார்த்தை:**

எசாயா 53: 10-11

திபா: 33: 4-5, 18-20, 22

எபிரேயர்: 4: 14-16

மாற்கு 10: 35-45 (அ) 10: 42-45

முழுமையை வலியுறுத்துகிறது. கடவுளோடு நாம் கொண்டுள்ள உறவு வெறுமனே நம்முடைய சொந்த முயற்சியால் அல்ல; அவரின் அருளில் வேரூன்றியுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது.

பல போலி இறைவாக்கினர்கள் உலகின் முடிவை முன்னறிவித்துள்ளனர். பல திரைப்பட இயக்குனர்களும் திரைப்படங்களில் உலக முடிவை, தீவிர வானிலை, பேரழிவு தரும் உலகளாவிய நிகழ்வுகள், அல்லது பேரழிவுக்காட்சிகளை திரைப்படங்களில் காட்டியுள்ளனர். உலகம் எப்போது அழியும்? “அந்த நாளையும் வேளையையும் பற்றித் தந்தைக்குத் தவிர வேறு எவருக்கும் தெரியாது” என்று நற்செய்தியில் இயேசு பதிலளிக்கிறார்.

கத்தோலிக்க மறைபோதகம் (கமபோ 675) இவ்வாறு குறிப்பிடுகிறது. “கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன் திருஅவை பல நம்பிக்கையாளர்களின் நம்பிக்கையை அசைக்கும் அளவுக்கு நடைபெறவிருக்கும் ஒரு இறுதி சோதனையை கடக்கவேண்டும்” கடவுளின் அன்புக்கும் சேவைக்கும் நம்மை அர்ப்பணிக்கும்போது, நம்முடைய நம்பிக்கை, சோதிக்கப்படும் என்பதையும் ஏதோ ஒரு வகையில் துன்புறுத்தலை சந்திக்க நேரிடும் என்பதையும் உறுதியாக நம்பலாம்.

நம்முடைய துன்பங்கள், சோதனைகள் மற்றும் உபத்திரவங்கள் மூலம் இயேசு தாம் அருகில் நம் வாசலருகில் இருப்பதாக உறுதியளிக்கிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், ஒருவர் தங்களுடைய நம்பிக்கைக்காக எவ்வளவு பெரிய துன்பங்களை அனுபவிக்கின்றார்களோ, அவ்வளவு அதிகமாக கடவுள் நம்மோடு இருக்கிறார். அவர் அங்கே உங்கள் இதயத்தின் வாயிலில் நம்பிக்கையுடனும், எதிர்நோக்குடனும் நீங்கள் அவரிடம் ஓடிவருவதற்காகக் காத்திருக்கின்றார்.

எனவே, இந்த உலகில் நமது வாழ்க்கை ஒரு புனிதப்பயணம் என்பதை நினைவில் கொள்வோம். கிறிஸ்து வரும்போது நாம் எங்கு நிற்போம் என்பது இப்போது நாம் வாழும் வாழ்க்கைமுறையைப் பொறுத்தது. ஒவ்வொரு நாளும் நேர்மையான வாழ்க்கையை வாழ்வதன்மூலம் தயாரிப்பில்லாத மரணத்தை தவிர்க்க நடவடிக்கை எடுப்போம்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 46/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

17 நவம்பர் 2024
பொதுக்காலம் ஆண்டின் 33 ஆம் ஞாயிறு
**(World Day of the Poor)**

NEW WAY OF BEING CHURCH

newbec

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:**

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்

நமக்கு முன் நம்மை விட்டுப் பிரிந்தவர்களை நினைவு கூர்தல்

# இன்னல்களை எதிர்கொள்ளத் தயார்

இன்றைய வாசகங்கள் உலகின் இறுதி தீர்ப்பு மற்றும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றி நம்மை கவனிக்கவைக்கிறது.

இன்றைய முதல் வாசகமான தானியேல் புத்தகத்தில் உண்மையுள்ளவர்கள் மீட்கப்படுவார்கள் என்ற வாக்குறுதியை நாம் எதிர்கொள்கின்றோம். உயிர்த்தெழுதல் மற்றும் இறுதிக் காலத்தில் நேர்மையாளர்கள் துயரத்தின் மத்தியிலும் முடிவில்லா வாழ்வு பெறுவர். எபிரேயருக்கு எழுதப்பட்ட இரண்டாம் வாசகத்தில் கிறிஸ்துவின் பலியின்

